R4881

# LOYALTY THE GREAT TEST
# விசுவாசம் மாபெரும் பரீட்சை

ஆயிரம் வருட யுக முடிவில் மானிடர்கள் பூரணராக்கப்படும் போது, உலகத்தின் மனுக்குலம் ஒரு இறுதியான சோதனைக்கு உட்படுத்தப்படும், மானிட சுபாவத்தின் பூரணத்தில் அல்ல, தேவனிடத்திலும் அவர்களது விசுவாசத்தைப் பற்றிய சோதனை. தாயாகிய ஏவாள் மீது வந்த சோதனை இந்த குணலட்சணத்தை பற்றியதாக இருந்தது. தேவனிடத்தில் விசுவாசம் அல்லது கீழ்ப்படியாமையை எது அமைக்கிறது என்பதை அறியாததினால் ஏவாள் வஞ்சிக்கப்படவில்லை. தேவன் முன்னரே அவளை எச்சரித்திருந்தார். எது சரி என்பதை அறிந்திருந்தாள். விளைவுகளை பொருத்தே அவர் வஞ்சிக்கப்பட்டாள். சாத்தானும் அதே போல் தான். தேவனுக்கு எதிராக தன்னுடைய திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்ற எண்ணத்தில் அவனுடைய வழியின் விளைவினால் வஞ்சிக்கப்பட்டான்.

ஆகையால் ஆயிரம் வருட யுக முடிவிலும் அது இருக்கும் என்று நம்புகிறோம். மனுக்குலத்தில் சிலர் அவர்கள் எடுக்கும் வழியின் பலனால் வஞ்சிக்கப்படுவார்கள். தெய்வீக பிரமாணத்திற்கு முழுவதுமாக விசுவாசமாய் இருக்கிற அனைவரும் பொல்லாங்கனின் வஞ்சகத்தை உணருவார்கள். ஆயிர வருட யுகத்தில் கிறிஸ்து, மத்தியஸ்தராக மனுக்குலத்திற்கும் நீதியின் முழு தேவைக்கும் இடையே நிற்பார். மனுக்குலமானது முன்னிருந்ததைப் போல பாதுகாப்பான வீட்டில் இருப்பார்கள். சகல தீய செல்வாக்குகளும் கட்டுப்படுத்தப்படும் போது மனுக்குலமானது தெய்வீக தேவையின் முழு அறிவுக்கு வரக்கூடிய மிகவும் சாதகமான சந்தர்ப்பத்தை பெறும். அவர்கள் இளைப்பாறுதலின் காலங்களின் ஆசீர்வாதங்களை முழுமையாக அனுபவித்த பிறகு ஒரு பரீட்சை வருவது சரியானதாக இருக்கும். அதாவது அவர்கள் நீதியை வெறும் கொள்கைக்காக கடைப்பிடிக்கிறார்களா அல்லது அவர்கள் தேவனுக்கும் நீதிக்கும் இதய பூர்வமான விசுவாசத்தையும், எந்த செல்வாக்கும் நீதியிலிருந்து நகர்த்த முடியாத நிலைமையை அடைந்திருக்கிறார்களா என்பதையும் சோதிப்பதற்காக ஆகும்.

ஆயிரம் வருட யுக முடிவில், அவர்கள் தேவனிடம் திரும்பிய பிறகு, அவர் அவர்கள் முழுமையான கீழ்ப்படிதலை கற்றுக்கொண்டிருக்கிறார்களா என்பதை தெரிந்து கொள்ள மனுக்குலத்தை இப்படியாக சோதிப்பார். கொஞ்ச காலம் பொல்லாங்கன் விடுவிக்கப்படுவான். அவர்கள் கீழ்ப்படிதலின் பாடத்தை முழுமையாக கற்றுக் கொண்டிருக்காவிட்டால், அவர்கள் நித்திய ஜீவனுக்கு அபாத்திரர் என்பதையும் அவர்கள் வெறும் கடமைக்காக ஊழியம் செய்திருக்கிறார்கள் என்பதையும் விளங்கப் பண்ணுவார்கள். ஏனெனில் அவர்கள் தேவனுடன் நிறைவான இருதய இணக்கத்திற்கு வரவில்லை. அதாவது அவர்களது விசுவாசத்தைக் குறித்த இந்த பரீட்சையில் அவர்கள் சுலபமாக பாதிப்படையக்கூடிய நிலைமையில் இருப்பார்கள்.

## தேவனுடனான விசுவாசத்திற்காக அனைவரும் சோதிக்கப்பட வேண்டும்

சாத்தான், தேவனிடத்தில் அவனுடைய விசுவாசத்திற்காக சோதிக்கப்பட்டான். ஆதாமும் ஏவாளும் தேவனிடத்தில் அவர்களுக்கான விசுவாசத்திற்காக சோதிக்கப்பட்டார்கள். நோவா காலத்தில் தேவ தூதர்கள் அவர்களது முழுமையான விசுவாசத்திற்காக சோதிக்கப்பட்டார்கள். இயேசுவும் கூட பிதாவினிடத்தில் அவரது விசுவாசத்திற்காக சோதிக்கப்பட்டார். ஆகையால் மனக்குலமும் ஆயிரம் வருட யுகத்தின் முடிவில் தேவனுடனான இருதய பூர்வமான நல்லிணக்கத்திற்காக சோதிக்கப்படுவார்கள்.

அவர்களது சோதனையின் வகையைக் குறித்து நமக்கு குறிப்பாக அறிவிக்கப்படவில்லை. ஒருவேளை அந்த சமயத்தில் மனுக்குலத்தின் மேல் சோதனை பூமிக்குரிய அரசாங்கத்தின் உரிமையை தங்களிடம் கொடுப்பதற்கு முன்னர் தாங்கள் அதை சொந்தமாக்கிக் கொள்ளும் விருப்பத்தில் இருக்கும். இது உண்மையாக இருந்தால், ஆயிரம் வருடம் முடியும் போது, பூமியெங்கும் பிரபுக்கள் ஆளுகை செய்யும் பழைய ஏற்பாட்டுக்கால பாத்திரவான்களின் கட்டுப்பாட்டிலிருந்து பூமியை தங்களது ஆளுகைக்கு உடனே மாற்றப்பட வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். (சங்கீதம் 45:16) காலம் முழுவதும் நிறைவேறும் போது அவர்கள் ஏமாற்றம் அடைவார்கள். “அவர்கள் பூமியெங்கும் பரவி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும் பிரியமான நகரத்தையும் வளைந்து கொண்டார்கள்.” (வெளி.20:9)

இது அந்த காலத்தில் உலகத்தின் அநேகருடைய நிலைமையைக் காட்டுகின்றது. அவர்களில் அநேகர் அமைதியற்ற நிலைமையில் இருப்பார்கள். “இந்த பழைய ஏற்பாட்டுக்கால பாத்திரவான்கள் நம்மிடமிருந்து அரசாங்கத்தை பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கும் உலகத்தின் அரசாங்கத்திற்கும் இடையே எதுவும் நிற்பது எங்களுக்கு தேவையில்லாதது” என்ற இந்த மனோபாவம் தேவனிடத்தில் அவிசுவாசமாக இருக்கும். இவைகளெல்லாம் தேவனுடைய ஏற்பாடு என்பதை அறிய, “ஆயிரம் வருடங்கள் முடிவுற்றதாக தெரிகிறது. அந்த அரசாங்கம் நமக்கு கொடுக்கப்படும் என்று நினைத்தோம். ஆனால் காரியங்கள் அனைத்தையும் தேவனுடைய கையில் விட்டுவிடுவோம். இந்த அரசாங்கத்தை நம்மிடம் கொடுப்பது நல்லது என்று கண்டால் நல்லது. காலம் ஆனபிறகு அதை தானே வைத்துக்கொள்ளுவது சிறந்தது என்று அவர் கண்டால், நாம் திருப்தியடைவோம்” என்று அவர்கள் சொல்லுவார்கள். இப்படிப்பட்டவர்களே விசுவாசத்தின் மனோபாவத்தை உடையவர்கள்.

இன்றைக்கும் அப்படியே இருக்க வேண்டும். ஒரே தேவனும் ஒரே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் உண்டு என்று அங்கீகரிப்பது நமது மனோபாவமாக இருக்க வேண்டும். அவர்களுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். ஏற்ற காலத்தில் தேவனுடைய ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமை முழுவதும் நிரூபிக்கப்படும். தேவன் அனுமதித்திருக்கிற அனைத்து காரியங்களிலும் அவைகள் முழுவதுமாக இணக்கமாக இருக்கும். இதை விசுவாசத்தின் மூலமாக காணக்கூடியவர்கள் தங்களது இருதய பூர்வமான விசுவாசத்தை தேவனிடத்தில் நிரூபிக்கிறார்கள்.